ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1933/17 - 2015 සැප්තැම්බර් මස 22 වැනි අඟහරුවාදා - 2015.09.22
1933/17 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 352/11*

*ச. அ. இல. : சீஎஸ்ஏ/1/24/1.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமனம் செய்யப்பட்டு, 2015, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1932/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்காணும் அமைச்சர்களின் அமைச்சர் பதவிகளானது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால், 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு, அவர்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்<br>மாண்புமிகு காமினி ஜயவிக்கிரம பெரேரா, பா.உ. அவர்கள் | - | "வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்" ஆக |
| 2. தொழில்நுட்ப, தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு அமைச்சர்<br>மாண்புமிகு சுசில் பிரேமஜயந்த , பா. உ. அவர்கள் | - | "விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்" ஆக |
| 3. பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வாயு பற்றிய அமைச்சர்<br>மாண்புமிகு சந்திம வீரக்கொடி, பா. உ. அவர்கள் | - | "பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி" அமைச்சர்" ஆக |

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, செத்தெம்பர் 21.

2015 இன் இல. 352/12

ச. அ. இல. : சீஎஸ்ஏ/1/24/1.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் நியமனம் செய்யப்பட்டு, 2015, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1932/69 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்காணும் பிரதி அமைச்சர்களின் பிரதி அமைச்சர் பதவிகளானது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால், 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு, அவர்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் பிரதி அமைச்சர் மாண்புமிகு (திருமதி) சுமேதா ஜி. ஜயசேன, பா.உ. அவர்கள் - "வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் பிரதி அமைச்சர்" ஆக

2. பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வாயு பற்றிய பிரதி அமைச்சர் மாண்புமிகு (திருமதி) அனோமா கமகே, பா. உ. அவர்கள் - "பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்" ஆக

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, செத்தெம்பர் 21.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.